# விடுதலை வேள்வியில் தமிழகம்

2001




சுமார் ஆறாண்டுகள் தனது வழக்குரைஞர் தொழிலையும் பொருட்படுத்தாது த. ஸ்டாலின் குணசேகரன் மேற்கொண்ட ஆழ்ந்த ஆய்விற்குப் பிறகு அவரால் தொகுக்கப்பட்டதே ' விடுதலை வேள்வியில் தமிழகம் ' என்ற இரண்டு பாகங்கள் ( 1151 பக்கங்கள் ) கொண்ட இந்நூலாகும்.

வரலாற்று ஆய்வாளர்கள், தேர்ந்த விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு தனித்தனித் தலைப்புகள் பிரித்துக் கொடுக்கப்பட்டு பல மாதங்கள் அவகாசமும் அளிக்கப்பட்டு சேகரிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். இந்நூலைத் தொகுத்தோடு

தான் ஒரு ஆய்வுக் கட்டுரையும் எழுதி இந்நூலைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார் த. ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் .

இந்நூலில் நூற்றுக்கணக்கான அரிய புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கை முழுமையாக வெளிக்கொண்டுவர தீவிரமாகவும், முறையாகவும் எடுக்கப்பட்ட தொடர்முயற்சிகளின் விளைவே இந்நூலாகும். இந்நூலுக்கு அன்றைய தமிழகமுதல்வர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அணிந்துரை எழுதியுள்ளார். மகாராஷ்ட்ர மாநிலத்தின் முன்னாள் ஆளுனரும் பழம்பெரும் தேசியவாதியுமான பாரதரத்னா சி. சுப்பிரமணியம் அவர்கள் முன்னுரை எழுதியுள்ளார். புகழ்மிக்க வரலாற்றாய்வாளர் பேராசிரியர் முனைவர் கே. ராஜய்யன் ஆங்கிலத்தில் ‘ FOREWORD ’ எழுதியுள்ளார்.

இந்நூல் 2001 ஆம் ஆண்டு சென்னை காமராஜர் அரங்கத்தில் நேதாஜியின் மகளிர் போர்ப்படைத் தளபதியான கேப்டன் லட்சுமி அவர்களால் வெளியிடப்பட்டு தியாகி ஐ. மாயாண்டிபாரதி அவர்களால் முதல்பிரதி பெற்றுக்கொள்ளப்பட்டது.

நூற்றுக்கணக்கான சுதந்திரப் போராட்ட தியாகிகள் மற்றும் பல்லாயிரம் மக்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில் தமிழகத்தின் புகழ்மிக்க அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் பங்கேற்று உரைநிகழ்த்திச் சிறப்பித்தனர்.

இந்நூலின் மூன்றாம் பாகம் தற்போது தயாராகி வருகிறது. மூன்று பாகங்களும் ஆங்கிலத்திலும் இந்தியிலும் விரைவில் கொண்டுவரும் பொருட்டு மொழி பெயர்ப்புப் பணி நடைபெற்று வருகிறது.